# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC –21/2023

**வழக்கு சாட்சி :PW2(LW8)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | | : | |
| தந்தை பெயர் | : | அழகன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கதவம்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 52 |

(எதிரிகள் ஆஜர் இல்லை .எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 07th day of October 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது கதவம்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 03.10.2022 ம் தேதி எங்கள் வீட்டின் அருகில் இருக்கும் லெட்சுமி என்பவர் வீட்டின் கதவின் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டு போயிருநததாக கேள்விபட்டேன். இது குறித்து கடந்த 06.10.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், கார்த்திகேயன் என்பவரும் அ.சா. 1ன் வீட்டிற்கு போலிசார் வந்தது குறித்து கேள்விப்பட்டு சென்றோம். அப்போது எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டுவரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன்இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 3 /PW2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>**எ.த.கு.வி**</u>

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாய வேலைசெய்து வருகிறேன் . எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பம் செய்த பேப்பரல் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன் . என்னிடம் போலிசார் அன்று விசாரித்து தனிப்பட்ட முறையில் வாக்குமூலம் எதுவும் வாங்கினார்களா என்றால் இல்லை. அ.சா.1 எனது உறவினர் என்றால் சரிதான். அ.சா. 1 எனது உறவினர் என்பதால் அவர் எங்கள் அனைவரையும் காவல் நிலையம் அழைத்து சென்றதன் பேரில் நானும் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான்.அங்கு அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில்

கைபயொப்பம் செய்தேனா என்றால் இல்லை. எந்த தேதியில் , எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் 06 ம் தேதி சென்றேன். காலை 10.00 மணிக்கு சென்றேன். எனது ஊருக்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் எத்தனை கி.மீ. தூரம் இருக்கும் என்றால் 7 கி.மீ தூரம் இருக்கும். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்தில் விசாரணை முடித்து விட்டு அன்று மதியம் தான் ஊருக்கு சென்றேன் எனறால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.